கலித்தொகைக் கூறும் நிலையாமை (பாலைக்கலி)

Instability in Kalithogai (Palaikali)

மு. சித்ரா மனோகரி
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் மேம்பாட்டுச் சங்கப்பலகை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை

M. Chitra Manogari
Ph.D Scholar
Sangapalagai Tamil Department
Universtiy of Madras, Chennai

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியங்கள் தனிமனிதனுக்கு மட்டுமல்லாமல் அவனைச் சார்ந்த சமூகத்துக்கும் தேவையான வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துகின்றன. தமிழ்ச் சமூகத்தின் மிகத் தொன்மையான இலக்கியங்கள் பல்வேறு வாழ்வியல் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. 2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் உலகியல் வாழ்க்கை பற்றிய உண்மைப் பதிவேடே கலித்தொகை. நல்ல எண்ணம் கொண்டவர்கள் தம் ஆழ்ந்த சிந்தனையில் கண்டு எடுத்த மாணிக்கம் போன்ற கருத்துகள் பாலைக்கலியில் கொட்டிக்கிடக்கின்றன. மனித சமுதாயம் பயனுற்று வாழ பாலைக்கலியில் பெருங்கடுங்கோ பாடிச்சென்ற வாழ்வியல் சிந்தனைகளை ஆராய்ந்து வெளிப்படுத்த இக்கட்டுரை முற்படுகிறது.

முக்கியச் சொற்கள்:

வாழ்வியல் நெறி, பாலைக்கலியில் பெருங்கடுங்கோ, தொல்காப்பியம், கலித்தொகை, திருமூலர்.

Abstract

The literature reveals the biological norms necessary not only for the individual but also for his or her community. The most ancient literatures of the Tamil community have various biological elements of their own. The anthology is a true record of the secular life of the Tamils who lived 2000 years ago. Ideas like the gem found by well-meaning people in their deepest thoughts are found in Palaikaliyiyal This article seeks to explore and express the biological ideas that have been Palaikaliyiyal Perunkadungo to make human society useful.

Keywords

Biology, Palaikkaliyil Perungadungo, Tolkappiyam, Kalitthokai, Thirumoolar

Citation

Chitra Manogari, M. "Instability in Kalithogai (Palaikali)." *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 1, 2021, pp. 11-17.

நிலையாமை

பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் றாமை
நில்லா உலகம் புல்லிய நெறித்தே[1]

உலகப் பொது நிலையாமையைக் கூறும் விழுமிய நோக்குடன் படைக்கப்பட்ட தொல்காப்பியம் சுட்டும் இக்கருத்து முதலில் உற்றுநோக்கத்தக்கது. உயிரைக் கொண்டு இயங்குகின்ற உடலாலோ, செல்வங்களாலோ, இளமைத் துடிப்பாலோ நாம் பிறருக்கு செய்யும் நன்மை தீமைகளைப் பொருத்தே நம் வாழ்வும் அமையும் என்பதை,

நீள்இரு முந்நீர் வளிகலன் வெளவலின்
ஆள்வினைக்கு அழிந்தோர்[2]

கலித்தொகைக் கூறும் இவ்வடிகள் மூலம் அறியலாம். இக்கூற்றுக்கு வலிமைச் சேர்க்கும் விதமாக புறநானூறு கூறும் கீழ்க் காணும் இவ்வடிகளும் எண்ணத்தக்கது.

நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்[3]

வள்ளுவரின் வாக்குபடி நிலையில்லாதவனவற்றை நிலை என எண்ணாது வாழ்வில் துன்பங்களற்று வாழ

நில்லா வற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை[4]

இக்குறளை கடைப்பிடிப்போம். மேலும் செல்வம் நிலையானது என்ற மயக்கத்தில் வாழ்வதை விடுத்து புறநானூற்றின்

செல்வத்துப் பயனே ஈதல்[5]

இவ்வடி கூறும் உண்மை வழி செல்தல் வேண்டும்.

செல்வம் நிலையாமை

திருவிழா நாளில் கோலாகலம் பூண்டிருக்கும் இடமானது அவ்விழா நிறைவுற்றப் பிறகு அவ்விடத்தின் தோற்றத்தைப் போன்று, செல்வம் நிறைந்திருக்கும் போது கூடியிருக்கும் சுற்றங்கள், வறுமையுற்ற தருணத்தில் நம்மைவிட்டு அகன்றுவிடும், செல்வம் நிலையில்லாத தன்மையுடையது என்பதை நமக்கு கீழ்க்காணும் பாலைக்கலியின் அடிகள் உணர்த்தும்.

கல்லெனக் கவின்பெற்ற விழவுஆற்றப் படுத்தபின்
புல்லென்ற களம்போலப் புலம்புகொண்டு[6]

செல்வம் ஒரு நிலையில்லாத பொருள். அச்செல்வம் வந்து சேரும் போது, அது சேர்ந்தாரை பெரிதும் இன்புறச் செய்யும், போகும் போது அதை கொண்டவரை தம்மளவில் மட்டும் அல்லாது பிறரால் இகழ்ந்து பேசும் துன்பத்தையும் கொடுத்து செல்லும். இச்செல்வமானது அடிக்கடிக் கைமாறிக் கொண்டிருக்கும். அப்படிப்பட்ட செல்வம் சேருங்கால் பிறருக்கு உதவி, நிலைத்த புகழைச் சேர்த்தல் வேண்டும் என்பதைப் கூறும் கலித்தொகை பாடல்-8:15-17(7) அடிகள் இங்கு சிந்திக்கத்தக்கது.

கைக்குக் கைமாறும் பணமே என்ற திரையிசைப் பாடலும் எளிமையாக இக்கருத்தை உணர்த்துகிறது.

பிறர் கண்முன் சிறப்பாகத் தோன்றும் பொருள் செல்வமானது, அது தோற்றுவிக்கும் மாய பிம்பத்தை பெரிது என எண்ணி, பொருள் உடையவனே உண்மையான செல்வம் உடையவன் என்ற எண்ணத்தையும் கொண்டு, நாம் சேர்க்கும் செல்வமானது இம்மைக்கும் மறுமைக்குமே பகையாகத்தான் விளங்கும் என்ற உண்மையை விளக்கும் கலித்தொகையின் பாடல் அடிகள் சிறப்பானவையே

பொருள் அல்லால் பொருளும்உண்டோ?
செம்மையின் இகந்துஒரீஇப் பொருள் செய்வார்க்கு, அப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது அறியாயே?[8]
தோற்றம்சால் தொகுபொருள் முயறிமன்[9]

செல்வமானது, தனக்கு உரிமையுடையவர் இவர்தாம் என்று யாரிடமும் நிலைத்து நில்லாது, அவரவர்க்குரிய நல்வினைகளையொட்டியே போவதும் வருவதுமாக இருக்கும் இயல்பினையுடையது என்ற பேருண்மையை விளக்கும் பாலைக்கலியின் வரிகள்,

"கிழவர் இன்னோர்"; என்னாது, பொருள்தான்,
புழவினை மருங்கின், பெயர்புபெயர்பு உறையும்
அன்ன பொருள்வயின் பிரிவோய்....[10]

செல்வம் உடையவராக ஒருவர் வாழும்போது, அவரோடு சேர்ந்து பழகி அவர் செல்வங்களை எல்லாம் தானும் அனுபவித்து, பின்பு அவருடைய வறுமையான காலத்தில் அவரை ஏறிட்டும் பார்க்காத உணர்வினை உடையவர்கள் வாழும் உலகியல் நிலையை கூறும் அடிகள்,

செல்வத்துள் சேர்ந்துஅவர் வளன் உண்டு, மற்றவர்
ஒல்கிடத்து உலப்பிலா உணர்விலார் தொடர்புபோல்[11]

இவ்வாறெல்லாம் பாலைக்கலியில் செல்வம் நிலையில்லாதது என்பதை உணர்த்தும் பாடல் அடிகளை பார்க்கும் போது வள்ளுவரின், நிலைத்து நிற்காத செல்வம், அதனை ஒருவன் பெற்றுவிட்டால், அது நிலைத்துநிற்பதற்கான அறச்செயல்களை அப்போதே செய்ய வேண்டும் என்ற மேலான சிந்தனைக் கூறும் குறள்

அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்.[12]

திருமூலர் அருளிய திருமந்திரத்தில் செல்வம் நிலையாமை குறித்து அவர் கூறிய, உலக வாழ்வில் நல்வழிக்குப் பயன்படுத்தாமல் சேர்த்து வைத்த செல்வத்தை மறுமை வாழ்வுக்கு எடுத்து செல்ல முடியாது என்பதை காட்டும் பாடல் 215(13) உற்றுநோக்கத்தக்கது.

இளமை நிலையாமை

பகல் நேரத்தில் அழகின் அற்புதமாக காட்சியளித்த ஒரு தாமரைத் தடாகமானது, இரவோடிரவாக அதில் உள்ள நீரெல்லாம் வற்றிவிட்டால், அடுத்த நதள் பொழுது அத்தடாகத்தின் தோற்றம் எவ்வாறு சீர்மை இழந்து காட்சியளிக்குமோ, அதேபோன்றதே நம் இளமையும் சில ஆண்டுகளுக்கு பின்பு பொழிவு இழந்து முதுமை தோற்றத்தில் காட்சியளிக்கும். இவ்வற்புதமான கருத்தை மையப்படுத்திய கலித்தொகையின் பாடல் வரி,

ஓர்இரா வைகலுள், தாமரைப் பொய்கையுள்
நீர்த்த் மலர்போல,....[14]

முழுநிலவு தேய்ந்தால் மீண்டும் வளர்வதைப் போன்று இளமையானது குன்றினால் மீண்டும் வளமை பெறாது என்பதை, அரும்பானது மலர்ந்து, பூவாகி பின்பு வாடி வீழ்வதைப் போல, இளமையும் அரும்பி, மலர்ந்து, மூப்பெய்தி உதிர்ந்துவிடும் என்கின்றது கலித்தொகையின் பாடல் வரிகள்.

தகைவண்டு புதிதுண்ணத் தாவிதழ் தண்போதின்
முகைவாய்த்த தடம்போலும் இளமையும் நிலையுமோ'[15]

இன்பங்கள் பலவற்றையும் விற்று நாம் தேடித்திரிந்து சேர்த்த செல்வத்தால் நாம் இழந்த இளமையை ஒருபோதும் மீட்டுத்தரவியலாது என்ற உண்மையை உணர்ந்து இளமையிலே நல்லவனவற்றைச் செய்து நற்புகழ் பெற வேண்டும் என்பதைக் கீழ்காணும் கலித்தொகையின் கூற்று நமக்கு உரைக்கும்,

பெருகிய செல்வத்தால் பெயர்த்தரல் ஒல்வதோ
செயலையம் தளிர் ஏய்க்கும் எழில் நலம்'[16]

நல்ல மணமிக்க முல்லையின் அரும்புகளை ஒன்றாக கோர்த்தால், நிறத்தாலும் வரிசை அமைப்பாலும் முல்லையை ஒத்த பல்வரிசை ஒழுங்கைப் பார்த்தே புகழ்ந்து பாராட்டுவரே அன்றி, மூப்பால் முதிர்ந்து, பற்கள் வீழ்ந்த தளர்வுற்ற நிலை சுட்டி பாராட்டுவதில்லை என்ற கருத்தமைந்த கலித்தொகையின் பாடல் 22 அடிகள்(17) இளமையின் நிலையற்ற தன்மையைச் சுட்டிக்காட்டுகின்றன.

ஆற்றுநீர் கழிந்து ஓடி கடலோடுக் கலப்பதுபோன்று இந்த இளமையும் நீங்கி உயிரானது பரம்பொருளோடு கலந்துவிடுவதை உரைக்கும் வரிகள்,

யாறுநீர், கழிந்தன்ன இளமை.....'[18]

இவற்றையெல்லாம் படித்தறியும் போது இளமை என்பது மனிதனின் பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்ட வாழ்வின் பாதையை நிர்ணயம் செய்யும் பருவம். மனிதனின் இளமை அழியும் நிலைக்கொண்டது என திருமூலர் கூற்றுப்படியும் அறியலாம்.

தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை'[19]

உயிர் நிலையாமை

கலித்தொகையில் பாடல் 9-ல்(20); உயிர் நிலையாமையை ஆசிரியர் சிறப்பாக எடுத்துக்காட்டியுள்ளார். நல்ல மணம் வீசக்கூடிய சந்தனமானது, அதைப் பூசிக்கொள்பவர்கே உபயோகப்படுவதைப்போன்று, அது பிறந்த மலைக்கு அதனால் எப்பயனும் இல்லை எனவும், அதுபோல முத்துக்களால் கோர்க்கப்பட்ட அழகிய மணிமாலையானது அணிபவர்கே பயன்தரும், அது பிறந்த கடலுக்கு அதனால் பயன் ஒன்றும் விளைவதில்லை. அதேபோன்று, யாழில் இருந்து தோன்றும் இனிய இசையானது அதைக் கேட்பவர்கே இன்பந்தரும், அது பிறந்த யாழுக்கு அதனால் பயனேதும் இல்லை என்பது திண்ணம். இது போன்றதே உடலில் தோன்றிய உயிரானது அவ்வுடலில் நிலையாக இல்லாமல் பிரிந்து சென்றுவிடும் என்பதை இப்பாடல் மூலம் உணர்கிறோம். இப்பாடலை உற்று நோக்கும் போது வள்ளுவரின்,

குடம்பை தனித்துஒழியப் புள்பறந் தற்றே
ஊடம்பொடு உயிரிடை நட்பு.[21]

தான் தங்கியிருந்த கூடானது தனித்து இருக்க, அதை விட்டு பறந்து வெளியேறிய பறவையைப் போல், உயிரானது உடலைவிட்டுச் சென்றுவிடும் என்பதை சுட்டிக்காட்டுகிறது இக்குறள். கூற்றமும் முதுமையும் உள்ளது என்ற உண்மையை அறிய வேண்டும் என்கிறது

கூற்றமும் மூப்பும் மறந்தாரோடு.....[22]

இப்பாடல் வரி. உடலையும் செல்வத்தையும் இளமையையும் உயிரில்லாமல் அனுபவிக்க இயலாது.

தழைக்கின்ற செந்தளிர் தண்மலர்க் கொம்பில்
இழைக்கின்ற தெல்லாம் இறக்கின்ற கண்டும்[23]

பல கிளைகளைக் கொண்ட மரத்திலிருந்து பழுப்புற்ற இலையானது உதிர்ந்து வீழ்வது போல, பல உறுப்புகளைக் கொண்ட உடலைவிட்டு உயிர் பிரிந்துவிடும் எனக் கூறுகிறார் திருமூலர்.

காலம் நிலையாமை

நாளென ஒன்றுபோற் காட்டி உயிர்ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்.[24]

வாழ்க்கையை ஆராய்ந்து உண்மையை நாம் உணர்வோமானால் "நாள்" என்பது ஒரு கால அளவாக கொண்டு உயிரை அறுக்கும் வாள் என்பது விளங்கும் என்கிறார் வள்ளுவர்.

கலித்தொகையில் பாடல் 12-ல் காலம் கரையும் தன்மைக் கொண்டது, அது எப்போது முடியும் என்பதை அறிந்தவர் எவருமில்லை என,

"கடைநாள் இதுவென்று அறிந்தாரும் இல்லை'[25]

வாழ்நாளின் கடைசிநாள் இதுவே என்று திட்டமாக உரைப்பவர் எவருமே இல்லை என்கிறது இவ்வரி.

நாற்றஞ்சால் நளிபொய்கை அடைமுதிர் முகையிற்குக்
கூற்றூழ்போற் குறைபடுகஉம் வாழ்நாளும் நிலையுமோ[26]

மலரும் அரும்பானது வாடி உதிர கூற்றமானது அற்றின் வாழ்நாளைக் குறைத்துவிடுவது போன்றே, நாள் என்னும் காலமும் நம் உடலில் இருந்து உயிரை பிரிக்கும் கூற்றமா மாறும் நிலையில்லாதது எனத் தெரிவிகின்றது மேற்சொன்ன அடிகள்.

வளியினும் வரைநில்லா வாழும்நாள்[27]

ஒரு வரையறைக் காட்டி காற்றை அடைத்து வைக்க இயலாது. அதுபோல நிலையில்லாத தன்மை உடையது வாழ்நாள் என்பதை எடுத்துக்கூறும் அருமையான வரியுடையது கலித்தொகையின் இப்பாடல்.

கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுத் தேறார் விழியிலா மாந்தர்[28]

கதிரவன் கிழக்கில் தோன்றி (பிறப்பு) மேற்கில் மறையும் (இறப்பு) வரையுள்ள இடைப்பட்ட கால அளவே மனிதனின் வாழ்நாள் என்கின்றார் திருமூலர்.

முடிவுரை

சிறுவித்தே பெருமரத்திற்கு ஆதாரம் என்பது போன்று, தனிமனித வளர்சிசியே சமுதாய வளர்ச்சிக்கும் மலர்ச்சிக்கும் வித்தாய் அமைகிறது. மனிதன் தன் அனுபவங்களை இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்துகிறான். இன்றைய உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதர்களின் சராசரி ஆயட்காலம் 60 ஆண்டுகளாக கணக்கிடப்பட்டுள்ளது. உலகில் நாம் வாழப்போகும் சில ஆண்டுகளாவது கலித்தொகைச்

ஆன்றவர் அடக்கம்போல[29]

சுட்டும் சான்றோர்களின் அடக்கத்தைப் போல பொருமையுடன் வாழ்ந்து, புறப்பொருள்களின் மேல் உள்ள பற்றையெல்லாம் விடுத்து, அகப்பொருளை உணர்ந்து, இன்பவாழ்க்கையை வாழ“அக இலக்கியத்தில் புற வாழ்வில்” நாம் நீக்க வேண்டியவற்றையும், நிலையில்லாதவனவற்றையும் கூறிய கலித்தொகையை கற்று பயன்பெறுவோம்!

அடிக்குறிப்புகள்

1. *தொல்காப்பியம், புறத்திணையியல், நூற்பா 18*
2. *கலித்தொகை, பாடல் 5: 6-7*
3. *புறநானூறு, பாடல் 195: 6-7*
4. *திருக்குறள் - 331*
5. *புறநானூறு, பாடல் 189-7*
6. *கலித்தொகை, பாடல் 5: 10-11*
7. *பாடல் 8: 15-17*
8. *பாடல் 14: 10,14-15*
9. *பாடல் 17: 10*
10. *பாடல் 21: 10-12*
11. *பாடல்: 25: 19-20*
12. *திருக்குறள் - 333*
13. *திருமந்திரம், பாடல் 215*
14. *கலித்தொகை, பாடல் 5:14-15*
15. *பாடல் 17: 15-16*
16. *பாடல் 15: 11-12*
17. *பாடல் 22:9-11*
18. *பாடல் 20:13*

19. *திருமந்திரம், பாடல் 223*
20. *கலித்தொகை, பாடல் 9*
21. *திருக்குறள் - 338*
22. *கலித்தொகை, பாடல் 12:18*
23. *திருமந்திரம், பாடல் 229*
24. *திருக்குறள் - 334*
25. *கலித்தொகை, பாடல் 12:15*
26. *பாடல் 17:11-12*
27. *பாடல் 20:9*
28. *திருமந்திரம், பாடல் 221*
29. *கலித்தொகை, பாடல் 32:8*

துணைநூற் பட்டியல்

1. *சுப்பிரமணியன், ச.வே. (2015). தொல்காப்பியம் விளக்கவுரை. சிதம்பரம், இ.ப. 2015.*
2. *ஞானசம்பந்தன், அ.ச. திருமந்திரம், சென்னை, கங்கை புத்தக நிலையம்.*
3. *புலியூர்க்கேசிகன் (உ.ஆ.). (2010). கலித்தொகை. சென்னை, கங்கை புத்தக நிலையம்.*
4. *மெய்யப்பன், ச. (ப.ஆ.). (2017). திருக்குறள் பரிமேலழகர் உரை சென்னை, மணிவாசகர் பதிப்பகம், இ.ப.*
5. *விசுவநாதன், அ. (உ.ஆ.). (2014). கலித்தொகை. நா.ப., சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.*

References

1. Subramanian, S.V. (2015). *Tolkappiyam Vizhakkavurai*, Chidambaram, Second Edition, Meyyappan Pathipagam.
2. Gnanasambanthan, A.S. *Thirumanthiram*, Chennai, Ganga Puthaga Nilayam.
3. Polyurekkesikan. (2010). *Kalithogai*, Chennai, Ganga Puthaga Nilayam.
4. Meyyappan, S. (2017). *Thirukkural Parimelazhagar Urai*, Chennai, Second Edition, Manivasakkar Pathipakam.
5. Viswanathan, A. (2014). *Kalithogai*, Chennai, New Century Book House, Fourth Edition.